**செ.வெ.எண்: 51** **நாள்: 22.10.2021**

**நாகப்பட்டினம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் (ஐடிஐ) நேரடி மாணவர் சேர்க்கை 30.10.2021 வரை நீட்டிப்பு என நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள நாகப்பட்டினம் மற்றும் திருக்குவளை அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் 2021-ஆம் ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை ஆன்லைன் மூலம் நடைபெற்றதில் தற்போது கீழ்கண்ட இடங்கள் காலியாக இருப்பதால் 30.10.2021 வரை நேரடி சேர்க்கை நீட்டிக்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் (பற்றவைப்பவர், தச்சர், அச்சுவார்ப்பவர், மெரைன் இன்ஜின் பிட்டர், இயந்திர வேலையாள், கடைசலர்) மற்றும் திருக்குவளை அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் (பற்றவைப்பவர், COPA மற்றும் பொருத்துநர்) போன்ற தொழில் பிரிவுகளில் சேர விரும்புவோர் மாற்றுச் சான்றிதழ், மதிப்பெண் சான்றிதழ் ($8^{th}$, $9^{th}$ மற்றும் $10^{th}$ Pass) சாதி சான்றிதழ், ஆதார் கார்டு அசல் மற்றும் நகல்கள், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றுடன் நேரடியாக உரிய அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நேரில் சென்று பயிற்சியில் சேரலாம். மேலும் விவரங்களுக்கு 04365-250129 தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**